**O.S.No.93/2018**

**PW1 : சம்பூரணம்** தேதி 10.11.2025

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்து எத்தனை தாக்குகளாக உள்ளது என்றால் மொத்தம் 10 ஏக்கர். இரண்டு இடங்களில் சொத்துகள் உள்ளது. 2 தாக்குகளாக உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காண்பிக்கப்படும் 5.7.2010 தேதியிட்ட பிரமாண பத்திரிக்கை என்ற ஆவணத்தில் உள்ள 3 வது கையெழுத்து என்னுடையது தான். அது **பிவாசாஆ 1**. தாவா சொத்தில் உள்ள சொத்து விவரங்களும் பிவாசாஆ 1 ல் உள்ள சொத்து விவரங்களும் ஒன்று தான் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு படிக்க தெரியாது என்று சொல்லவிட்டார். தாவா சொத்துகளில் எந்த சொத்துகள் பூர்வீக சொத்துகள் எந்த சொத்துகள் என் அப்பா கிரையம் பெற்ற சொத்துகள் என்று சொல்லமுடியுமா என்றால் என் தாத்தாவின் பூர்வீக சொத்து 5 ஏக்கர். என் அப்பா கிரையம் வாங்கிய சொத்து 5 ஏக்கர். 24.3.1941 ல் என் அப்பா பூமியை வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். என் அப்பா கிரையம் வாங்கிய விவரத்தை நான் பிராதில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஈரோடு கிராமத்தில் என் அப்பா 4 ஏக்கர் 65 சென்ட் 1963 ல் கிரையம் வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு ஈரோடு கிராமத்தில் என் கணவர் வழியில் பாத்தியப்பட்ட சொத்துகள் இல்லை. என் அப்பா சொத்து மட்டும் தான் இருக்கிறது. என் மற்றொரு சகோதரிக்கு 1963 என் அப்பா வாங்கிய சொத்துக்கு அருகே சொத்து உள்ளது என்றால் சரியல்ல. ஈரோடு கிராமத்தில் உள்ள 12.2.63 ல் என் அப்பா வாங்கிய சொத்தை ஏன்

தாவாவில் சேர்க்கவில்லை என்று சொன்னால் அது விடுபட்டு போய் விட்டது. 1941 மற்றும் 1963 ல் என் அப்பா கிரையம் வாங்கிய கிரைய பத்திரங்களை என் வழக்கறிஞரிடம் கொடுத்திருந்தேன். 1963 ல் கிரையம் வாங்கிய சொத்து முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரிய பிரிவுக்கு ஆர்ஜிதம் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு ஆர்ஜிதம் செய்யப்பட்டு அரசால் கொடுக்கக்பட்ட இழப்பீடு தொகை அனைத்தையும் 1ம் பிரதிவாதி சுந்தரமூர்த்தி வாங்கிவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என் தந்தை ஈரோட்டில் ரெஸ்ட் ஹவுஸ் அருகே மரக்கடை வைத்திருந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அவர் சந்தைக்கு வண்டி ஓட்டி வந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. என் தந்தை பூமியை குத்தகைக்கு எடுத்து ஓட்டி வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. என் தந்தையுடன் பிறந்தவர்கள் 2 ஆண்கள் 2 பெண்கள் ஆவார். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் வையாபுரியும் குப்பணகவுண்டர் என்றால் சரிதான். அவர்கள் சொத்தை பிரித்து கொண்டதில் என் அப்பாவிற்கு 2 ஏக்கர் 68 சென்ட் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பூமிகளுக்கு பாசன வசதி இல்லை என்பதால் வருமானம் இல்லை என்று சொன்னால் சரியல்ல வருமானம் வந்தது. என் தந்தையின் வருமானம் விறகு கடை சந்தைக்கு வண்டி ஓட்டி வந்தது தான் என்று சொன்னால் சரியல்ல. அந்த வருமானத்தை கொண்டு தான் என் தந்தை 1941 மற்றும் 1963 மூலம் சொத்துகளை கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரம் தெரிந்ததால் தான் மேற்படி 2 கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெற்ற விவரத்தை வழக்கில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**( வழக்கறிஞர் கேட்டுகொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது).**